## மருத்துவக் கல்வியில் ஓ.பி.சி. 27% ஒதுக்கீடு!

# 20,088 மருத்துவ மாணவர்களின் கனவை நிறைவேற்றிய தலைவர்!



இந்தியாவின் சமூகநீதி வரலாற்றில் மறக்க முடியாத மகத்தான நாள். மருத்துவக் கல்வியில் இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் 27 சதவீத இட ஒதுக்கீட்டை உறுதி செய்த நன்னாள்.

சமூகநீதிக் கொள்கையில் உறுதி, அசராத உழைப்பின் அடையாளம் நம் திராவிட மாடல் நாயகர் - தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தந்த வழிகாட்டலில் உச்சநீதிமன்றத்தின் மூலம் வென்று வந்த நாள்.

கல்வி, வேலைவாய்ப்பு, அரசியல் உரிமைகளில் எல்லோருக்கும் எல்லாம் என சமூகநீதிக்கான வரலாற்றை தொடங்கி வைத்தனர் நீதிக்கட்சி முன்னோடிகள். அந்த உரிமைப் போராட்டம், சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என படிப்படியாக அரசியல் வளர்ச்சி கண்ட பின்னர்தான், ஒடுக்கப்பட்ட தமிழ் சமுதாயம் படிப்படியாக முன்னேற்றியது.

அந்தப் போராட்டத்தை மாபெரும் மக்கள் இயக்கமாக மாற்றியவர் தந்தை பெரியார். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் சமூகநீதியை சட்ட வடிவங்களில் உறுதி செய்தனர். அணையாத அந்த திராவிடப் பெருஞ்சுடரை, கலைஞருக்குப் பின் தன் கைகளில் ஏந்தி "எல்லோருக்கும் எல்லாம்" என திராவிட மாடல் ஆட்சியில் இந்தியாவுக்கே வழிகாட்டிக் கொண்டிருக்கிறார் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்.

'கல்வியே நம் தலைமுறையை மாற்றும் ஆயுதம்' என பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் கொண்டிருந்த உறுதியோடு, நம் கழகத் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டு மாணவர் நலனில் காட்டும் அக்கறைகள் ஏராளம்.

மருத்துவ உயர்கல்வியில் இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இழைக்கப்பட்டு வந்த அநீதியை அறிந்தவர், அதற்கெதிரான சட்டப் போராட்டத்துக்கு 'நீ சென்று வென்று வா' என்று எனக்குக் கட்டளையிட்டார்.

அந்தச் சட்டப் போராட்டத்தில், இந்தியாவுக்கே வெளிச்சம் கிடைக்கும் வகையில், அகில இந்திய மருத்துவ மாணவர் சேர்க்கையில், இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு 27% இட ஒதுக்கீட்டை உச்சநீதிமன்றம் வழி உறுதி செய்தோம்.

2019 ஆம் ஆண்டில், மாநிலங்களவை உறுப்பினராக எனக்கு மாபெரும் வாய்ப்பை அளித்தார் கழகத்தலைவர் அவர்கள். ஜனநாயகக் கடமையாற்றும் முதல் உரையிலேயே, மருத்துவப் படிப்புக்கான அனைத்திந்திய தொகுப்பு இடங்களில் ஓ.பி.சி. இட ஒதுக்கீடு கோரிக்கையை வலியுறுத்தினேன்.

எந்தக் கோரிக்கை, யார் மூலம், எங்கு ஒலிக்க வேண்டும் என்பதை அறிவார் நம் தலைவர். கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில் , அவர் காட்டிய உறுதியிலேயே நாடாளுமன்றம் வழி, உயர்நீதி மன்றம், உச்ச நீதிமன்றம் வழி போராட்டத்தை நடத்தினோம். 2019 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் தொடங்கிய நம் போராட்டம், 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் தேதி, உச்ச நீதிமன்ற தீர்ப்பின் வழி உறுதி செய்யப்பட்டது.



**வழக்கறிஞர் வில்சன்**
**மாநிலங்களவை உறுப்பினர்**

"நாடு முழுவதும் உள்ள அனைத்திந்திய தொகுப்பில் உள்ள மாநில அரசுகளுக்கு உட்பட்ட அனைத்து இளநிலை, முதுநிலை, பட்டய, பல் மருத்துவப் படிப்புகளில் OBC வகுப்பினருக்கு 27 சதவித இட ஒதுக்கீடு தர ஒப்புக்கொண்டு அரசாணை வெளியிட்டது ஒன்றிய அரசு.

இதன் மூலம் 2021 முதல் 2025 வரை நான்கு கல்வியாண்டுகளில் சுமார் 20,088 பிற்படுத்தப்பட்ட, இதர பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் கல்வி உரிமை உறுதி செய்யப்பட்டுள்ளது. வரலாற்றின் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய அந்த சாதனைப் போராட்டத்தை நிகழ்த்திக் காட்டியவர் நம் கழகத் தலைவர் அவர்கள். ஆட்சியில் மட்டுமல்ல; உறுதி மிக்க செயல்பாடுகளாலும் இன்று இந்தியாவுக்கே வழிகாட்டும் தலைவராக, வரலாற்றை தெற்கிலிருந்து எழுதிக் கொண்டிருக்கிறார் நம் தலைவர்.

இந்தியாவில் ஒட்டுமொத்த ஓ.பி.சி. மாணவர்களின் கல்வி உரிமையை நிலைநாட்டிய இந்த நாள், நம் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வெற்றித் திருநாளாக கொண்டாடப்பட வேண்டும். கழகத் தலைவரின் வழியில் சாதனை பயணத்தை தொடர்வோம்!



விருதுநகர் வடக்கு மாவட்டம் காரியாபட்டி ஊராட்சி ஒன்றியம் நந்திக்குண்டு கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கடையை நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு திறந்து வைத்து விற்பனையை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் கண்ணன், மாவட்டக் கழக பொருளாளர் வேலுச்சாமி, மாவட்ட கவுன்சிலர் தங்க தமிழ்வாணன், ஒன்றிய துணை செயலாளர் குருசாமி, தி.மு.க. நகரச் செயலாளர் செந்தில், நந்திக்குண்டு தி.மு.க. பிரமுகர்கள் பெரியசாமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பொது விநியோக திட்ட அலுவலர்கள் பங்கேற்றனர்.

## அத்தனை கோடி, இத்தனை கோடி நிதியென பிரதமர் பட்டியலிடாமல்

# தமிழ்நாடு அரசின் கோரிக்கைகளை நிறைவேற்றினால்தான் மக்களின் நன்மதிப்பைப் பெறமுடியும் !

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கருத்து!

சென்னை, ஜூலை 30-

அத்தனை கோடி, இத்தனை கோடி நிதியென பிரதமர் பட்டியலிடாமல், தமிழ்நாடு அரசு வைத்துள்ள கோரிக்கைகளை நிறைவேற்றி தந்தால் தான் மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற முடியும் என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுகுறித்து 28.7.2025 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

தமிழ்நாட்டிற்கு வந்த பிரதமர் மோடி அவர்கள் வழக்கம் போல் இம்முறையும் தமிழகத்திற்கு நாங்கள் நிதியை அள்ளி அள்ளி தருகிறோம் என்கிற கோணத்தில் பேசிவிட்டு சென்றுள்ளார். ஆனால் தமிழகத்திற்கு ஒன்றிய அரசு ஒதுக்க வேண்டிய நிதியை பட்டியலிட்டு கொண்டே செல்லலாம். வெள்ள நிவாரண நிதி தொடங்கி கல்வி நிதி வரை பலமுறை கேட்டு கேட்டு தமிழகம் சலிப்படைய தொடங்கிவிட்டது என்பதே உண்மை.

இந்நிலையில் கங்கை கொண்ட சோழபுரத்தில் நடந்த விழாவில் பிரதமர் மோடி அவர்களிடம் தமிழகத்தின் கோரிக்கைகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த மனு, அமைச்சர் தங்கம் தென்னரசு மூலம் வழங்கப்பட்டுள்ளது. இம்மனுவில் தமிழகத்தின் தேவைகள், எதிர்பார்ப்புகள் அனைத்துமே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்கான ரூ.2 ஆயிரத்து 152 கோடி கல்வி நிதியை தேசிய கல்வி கொள்கையில் கையெழுத்திடவில்லை என்ற ஒரே காரணத்திற்காக ஒன்றிய அரசு இன்னமும் வழங்காமல் இழுத்தடித்து வருகிறது. ஒன்றிய அரசின் மும்மொழி கொள்கையை தமிழகம் மட்டுமின்றி, பிற மாநிலங்களும் கூட ஏற்க தயாராக இல்லை.

தமிழகத்திற்கான கல்வி நிதி வழங்கப்படாத காரணத்தால் லட்சக்கணக்கான மாணவ, மாணவிகளின் எதிர்கால படிப்பு பாதிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு கல்வி அமைப்பில் காணப்படும் 2.20 லட்சம் ஆசிரியர்கள், 32 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்களும் இதனால் பாதிப்பைச் சந்தித்து வருகின்றனர். பிஎம்ஸ்ரீ புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டால் மட்டுமே கல்வி நிதியை ஒதுக்குவோம் என ஒன்றிய அரசு உத்தரவிடுவது ஜனநாயக கொள்கைகளுக்கு விரோதமானதாகும்.

தமிழகத்தில் 20 ஆண்டுகளுக்கு முன்பு அனுமதிக்கப்பட்ட ரயில்பாதை திட்டங்கள் கூட இன்னமும் செயல்படுத்தப்படாமல் உள்ளது. திண்டிவனம் - செஞ்சி, மதுரை - தூத்துக்குடி



தினகரன்
ஜூலை 28, 2025 திங்கட்கிழமை
தீர்வு கிடைக்குமா?
தமிழ்நாட்டிற்கு வந்த பிரதமர் மோடி வழக்கம்போல் இம்முறையும் தமிழகத்திற்கு நாங்கள் நிதியை அள்ளி அள்ளி தருகிறோம் என்கிற கோணத்தில் பேசிவிட்டு சென்றுள்ளார். ஆனால் தமிழகத்திற்கு ஒன்றிய அரசு ஒதுக்க வேண்டிய நிதியை பட்டியலிட்டு கொண்டே செல்லலாம். வெள்ள நிவாரண நிதி தொடங்கி கல்வி நிதி வரை பலமுறை கேட்டு கேட்டு தமிழகம் சலிப்படைய தொடங்கிவிட்டது என்பதே உண்மை.
இந்நிலையில் கங்கை கொண்ட சோழபுரத்தில் நடந்த விழாவில் பிரதமர் மோடியிடம் தமிழகத்தின் கோரிக்கைகள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்த மனு, அமைச்சர் தங்கம் தென்னரசு மூலம் வழங்கப்பட்டுள்ளது. இம்மனுவில் தமிழகத்தின் தேவைகள், எதிர்பார்ப்புகள் அனைத்துமே சுட்டிக்

உள்ளிட்ட முக்கிய ரயில்பாதை திட்டங் களை ஒன்றிய அரசு செயல்படுத்துவது நல்லது. கோவை, மதுரை ஆகிய நகரங்களில் மெட்ரோ ரயில் திட்ட பணிகளும் செயல்பாட்டுக்கு வருவதில் தாமதம் நீடிக்கிறது.

இலங்கைக் கடற்படையின் தாக்குதல் தமிழக மீனவர்கள் மீது தொடர்ந்து நடந்து வருகிறது. தமிழக மீனவர்களின் படகுகளையும் அடிக்கடி சிறைபிடித்து கொள்கின்றனர். மீனவர்களையும், மீன்பிடி உபகரணங்களை மீட்க ஒன்றிய அரசு இன்று வரை நடவடிக்கை எடுத்த மாதிரி தெரியவில்லை. பிரதமர் மோடி அவர்கள் தனது நேரடி கவனத்தை செலுத்தினால், இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட மீனவர்களையும், படகுகளையும் விரைவில் மீட்க முடியும்.

ஒன்றிய அரசின் 2018-19ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பாதுகாப்பு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்காக தமிழ்நாடு மற்றும் உத்தர பிரதேசத்தில் 2 பாதுகாப்பு தொழில்துறை பெருவழிச்சாலைகள் அமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. அதற்கான நடவடிக்கைகளும் இல்லை. சேலம் உருக்காலையில் உள்ள பயன்படுத்தப் படாத நிலத்தை கொண்டு பாதுகாப்பு தொழில் பெருவழிச்சாலைக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

தமிழகத்தின் உணர்வுகளுக்கும், மக்களின் நலன்களுக்கும் பிரதமர் மதிப்பளிப்பதாக இருந்தால், தமிழக அரசு சார்பில் வழங்கப்பட்டுள்ள கோரிக்கைகளை ஏற்று, பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை வழங்கிட வேண்டும். பொத்தாம் பொதுவாக அத்தனை கோடி, இத்தனை கோடி நிதி என பிரதமர் இனிமேல் பட்டியலிடாமல், தமிழ்நாடு அரசின் கோரிக்கைகளை இவற்றையெல்லாம் நிறைவேற்றி தந்துள்ளோம் என பேச்சில் தெரிவித்தால், மக்கள் மத்தியில் நன்மதிப்பை வருங்காலத்திலாவது பெற முடியும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கேரளத்தைச் சேர்ந்த கத்தோலிக்க கன்னியாஸ்திரிகள் சத்தீஷ்கரில் துன்புறுத்தப்பட்டு கைது!

# சிறுபான்மை மக்கள் மாண்போடும் - சம உரிமைகளோடும் நடத்தப்பட வேண்டும்!

## வலைதளப்பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, ஜூலை 30-

கேரளத்தைச் சேர்ந்த கத்தோலிக்க கன்னியாஸ்திரிகள் இருவர் சத்தீஷ்கர் மாநிலத்தில் பஜ்ரங்தள் அமைப்பின் பொய்க்குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் துன்புறுத்தப்பட்டு கைது செய்யப்பட்டிருக்கும் தகவலறிந்து சமூக வலைதளத்தில் விடுத்த கண்டனப் பதிவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "இந்தியாவின் சிறுபான்மையின மக்கள் மாண்போடும் சம உரிமைகளோடும் நடத்தப்பட வேண்டும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**கேரளத்தைச் சேர்ந்த கத்தோலிக்க கன்னியாஸ்திரிகள் இருவர் சத்தீஸ்கர் மாநிலத்தில் பஜ்ரங் தள் அமைப்பின் பொய்க் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் துன்புறுத்தப்பட்டு, கைது செய்யப்பட்டிருப்பது மிகுந்த கவலையளிக்கிறது.**

**இத்தகைய கும்பல் வன்முறையும், அரசு அது குறித்து அமைதி காப்பதும் மதப் பயங்கரவாதத்தின் ஆபத்தான போக்கை வெளிப்படுத்துகிறது.**

**இந்தியாவின் சிறுபான்மையின மக்கள் மாண்போடும் சம உரிமைகளோடும் நடத்தப்பட வேண்டும்; மாறாக அவர்களை அச்சுறுத்தக் கூடாது.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## விமானப் பாதுகாப்பு குறித்து

# ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

## மாநிலங்களவையில் – கனிமொழி என்.வி.என்.சோமு கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 30-

நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழக உறுப்பினர் டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு "விமானங்களின் பராமரிப்பு - பாதுகாப்பு குறித்து ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?" என்று கேள்வி எழுப்பினர்.

இக்கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் முரளிதர் மொஹல் அளித்த பதில் வருமாறு:

அகமதாபாத்தில் போயிங் 787 ரக விமானம் விபத்துக்குள்ளான அடுத்த நாளே, நாட்டில் மொத்தமுள்ள 33 போயிங் 787 ரக விமானங்களிலும் பாதுகாப்பு அம்சங்களை ஆய்வுசெய்ய உத்தரவிடப்பட்டு, இதுவரை 31 விமானங்களில் ஆய்வு முடிந்துள்ளது. 8 விமானங்களில் சிறிய அளவிலான கோளாறுகள் கண்டறிந்து சரி செய்யப்பட்டபின் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்பட்டது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் முரளிதர் மொஹல் பதிலளித்தார்.



## தருமபுரி மாவட்டம் - கழகத் தீர்மானக் குழுச் செயலாளர்

# கீரை எம்.எஸ்.விஸ்வநாதன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஜூலை 30–**

**கழகத் தீர்மானக் குழுச் செயலாளர் கீரை எம்.எஸ்.விஸ்வநாதன் அவர்களின் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:–**

தர்மபுரி மாவட்டம். அரூர் அருகே உள்ள கீரைப்பட்டியைச் சேர்ந்த கழகத் தீர்மானக் குழுச் செயலாளர் கீரை எம்.எஸ்.விஸ்வநாதன் (வயது 75) 28.07.2025 அன்று அதிகாலை உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து வருந்தினேன்.

பேரறிஞர் அண்ணா காலத்தில் இருந்தே கழகத்தில் பணியாற்றிய அவர், முத்தமிழறிஞர் கலைஞரின் அன்பைப் பெற்று ஒருங்கிணைந்த தர்மபுரி - கிருஷ்ணகிரி மாவட்ட துணைச் செயலாளராக 50 ஆண்டுகளாக திறம்பட பணியாற்றியவர். 1989 தேர்தல் பரப்புரையில் முன்னாள் பிரதமர் வி.பி. சிங் அவர்களின் பேச்சை தமிழில் மொழி பெயர்த்தவர்.

கழகத்தில் மாநில சட்டதிட்டக் குழு இணைச் செயலாளர் - மாநில கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர் - 1977 முதல் தலைமைக் கழகப் பேச்சாளர் - தற்போது மாநில தீர்மானக் குழுச் செயலாளர் எனப் பல்வேறு பொறுப்புகளில் திறம்பட பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களிலும் கலந்து கொண்டு சிறையேகிய கீரை எம்.எஸ். விஸ்வநாதன் அவர்களது மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கும் கழக உடன் பிறப்புகளுக்கும் எனது ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## பணிபுரியும் பெண்கள் — மாணவிகளின்

# பாதுகாப்பை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

## மாநிலங்களவையில் — இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 29-

பணிபுரியும் பெண்கள் மற்றும் மாணவிகளின் நலன் மற்றும் பாதுகாப்பு குறித்து நாடாளுமன்றத்தில் தி.மு.க. எம்.பி. இரா. கிரிராஜன் ஒன்றிய அரசிடம் கேள்வி எழுப்பினார். மாணவர்களுக்கான வசதிகள் பெண்களில் பணிபுரியும் இடங்களிலும், மாணவிகள் கற்கும் இடங்களிலும் சுகாதார வசதிகள், பாதுகாப்பான கழிப்பறைகள், சுத்தமான தண்ணீர் போன்றவை இல்லாதது அவர்களின் ஆரோக்கியம், சுயமரியாதை, கண்ணியம், பாதுகாப்பு ஆகியவற்றை மோசமாகப் பாதிக்கிறது என்பதையும், பெண்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதையும் கடினமாக்குகிறது என்பதையும் ஒன்றிய அரசு அறிந்திருக்கிறதா என்றும், இதுபோன்ற இன்னல்களை குறைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் கேள்வி எழுப்பினார்.



இந்தக் கேள்விகளுக்கு பதிலளித்துள்ள மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் இணை அமைச்சர் சாவித்ரி தாக்கூர், பெண்களின் உடல்நலம், சுகாதாரம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கு ஒனிய அரசு எடுத்த முயற்சியால், ஸ்வச் பாரத் அபியானின் கீழ் 11.8 கோடிக்கும் மேற்பட்ட வீடுகளில் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன என்றும், ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் மூலம் 15.6 கோடி வீடுகளுக்கு குழாய் நீர் இணைப்புகளை வழங்கப்பட்டுள்ளது என்றும், இதன்மூலம் பெண்களின் சோர்வு மற்றும் நேரமின்மை ஆகியவற்றை குறைத்து சுகாதாரத்தை மேம்படுத்த உதவியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மலிவு விலையில் சானிட்டரி நாப்கின்கள் மற்றும் தரமான மருந்துகளை எளிதாகப் பெறுவதை உறுதி செய்வதற்காக, பிரதம மந்திரி ஜனசதி பரியோஜ்னா (PMBJP) திட்டத்தின் கீழ், நாடு முழுவதும் 16 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஜனசதி மையங்கள் அமைக்கப்பட்டு, அவை மூலம் நியாயமான் விலையில் மருந்துகள் வழங்கப்படுவதுடன், சுவிதா என்ற மக்கக்கூடிய சானிட்டரி நாப்கின்களை ஒரு பேடி ஒரு ரூபாய் என்ற விலையில் வழங்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மாதவிடாய் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை இளம் பருவப் பெண்களிடையே அதிகரிக்கும் நோக்கில், 10 முதல் 19 வயதுக்குட்பட்ட இளம் பருவப் பெண்களிடையே, அங்கீகாரம் பெற்ற சமூக சுகாதார ஆர்வலர் (ASHA) மூலம் மானிய விலையில் சானிட்டரி நாப்கின் பொதிகள் வழங்கப்பட்டுவருவதாகவும் ஒன்றிய அரசின் இணை அமைச்சர் தெரிவித்துள்ளார். கிராமப்புறங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, மாதவிடாய் சுகாதார மேலாண்மை குறித்த தேசிய வழிகாட்டுதல்களையும் ஒன்றிய அரசு உருவாக்கியுள்ளதாக பதிலளிக்கப்பட்டுள்ளது.

பணிபுரியும் பெண்கள் மற்றும் மாணவிகளுக்காக மிஷன் சக்தியின் கீழ், வேலை செய்யும் பெண்கள் விடுதிக்கான சகி நிவாஸ் திட்டத்தை செயல்படுத்தி வருவதாகவும், இந்தத் திட்டத்தை செயல்படுத்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு நிதி விடுவிக்கப்படுவதாகவும் பதில் கூறப்பட்டுள்ளது. சகி நிவாஸில் வசிப்பவர்களின் குழந்தைகளுக்கான பகல்நேர பராமரிப்பு மையம் வழங்குவதும் இந்த திட்டத்தின் முக்கிய அம்சம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் தலைமையிலான வளர்ச்சி என்ற கருத்தை உணர்வதற்கான முக்கிய படியாக,

பெண்களின் பாதுகாப்பு, கண்ணியம், வாய்ப்பை உறுதி செய்தல் ஆகியவற்றை கருத்தில்கொண்டு, நிதி அமைச்சகத்தின் செலவினத் துறையால், மூலதன முதலீட்டிற்கான மாநிலங்களுக்கான சிறப்பு உதவி (SASCI) திட்டத்தின் கீழ் பணிபுரியும் பெண்களுக்கான புதிய விடுதிகளைக் கட்டுவதற்காக 28 மாநிலங்களுக்கு 5 ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளதாகவும், அதன்மூலம் 52,991 படுக்கைகள் கொண்ட 254 பணிபுரியும் பெண்கள் விடுதிகளைக் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இவற்றிற்கு 4 ஆயிரத்து 826 கோடியே 31 லட்ச ரூபாய் செலவாகும் என்றும், முதல் தவணையாக 3,147 கோடியே 66 லட்ச ரூபாய் 202425ஆம் ஆண்டில் மாநிலங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் ஒன்றிய அரசின் இணை அமைச்சர் தரப்பில், தி.மு.க. எம்.பி. கிரிராஜனின் கேள்விக்கு பதிலளிக்கப்பட்டுள்ளது.